


**29. 07. 2025**

**தலைப்பு செய்திகள்**

- **பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய 3 தீவிரவாதிகள் ஆபரேஷன்** மஹாதேவ் தாக்குதலில் சுட்டுக்கொல்லப்பட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா மக்களவையில் தெரிவித்தார்.

- **தேசிய கல்விக்கொள்கை நம் கல்வி திட்டத்தில் மறுமலர்ச்சியை** ஏற்படுத்தியுள்ளதாக மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் கூறியுள்ளார்.

- **நிசார் செயற்கைகோள் GSLV F-16** ராக்கெட் மூலம் நாளை மாலை விண்ணில் செலுத்தப்படுவதற்கான 27அரை மணிநேர கவுண்ட் டவுன் இன்று பிற்பகல் மணி 2.10-க்கு தொடங்குகிறது.

- **மக்கள் பிரச்சனைகளுக்கு அஇஅதிமுக தொடர்ந்து குரல் கொடுக்கும் என்று** அக்கட்சியின் பொதுசெயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியுள்ளார்.
- **கஜகஸ்தானில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர்** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு சசிகுமார் முகுந்தும், கரன்சிங்கும் தகுதிபெற்றுள்ளனர்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖❖

## ஆபரேஷன் மஹாதேவ்

**பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் தொடர்புடைய மூன்று** தீவிரவாதிகளை இந்திய ராணுவப்படை, மத்திய ரிசர்வ் காவல்படை, ஜம்முகாஷ்மீர் காவல்படை இணைந்து **ஆபரேஷன் மஹாதேவ்** தாக்குதல் மூலம் நேற்று வெற்றிகரமாக சுட்டுக் கொன்றதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

மக்களவையில் **ஆபரேஷன் சிந்தூர்** துல்லிய தாக்குதல் குறித்த விவாதத்தில் இன்று உரையாற்றிய அமைச்சர், சுலைமான், ஆ.்.ப்கான், ஜிப்ரான் என்ற இந்த 3 தீவிரவாதிகள் பஹல்காம் தீவிரவாத தாக்குதலில் ஈடுபட்டதற்கான வலுவான ஆதாரங்கள் உள்ளதாக குறிப்பிட்டார்.

பஹல்காமில், குடும்ப உறுப்பினர்களின் முன்பு அப்பாவி சுற்றுலா பயணிகள் கொல்லப்பட்டதை எடுத்துரைத்த திரு. அமித்ஷா, இந்த தாக்குதலை புரிந்தவர்கள் நாட்டைவிட்டு எவ்வழியிலும் வெளியேற கூடாது என்று பாதுகாப்பு படையினருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாகவும் எடுத்துரைத்தார்.

இத்தீவிரவாதிகளை நமது ராணுவப்படையினர் அழித்ததாக கூறிய திரு.அமித்ஷா தீவிரவாதிகளின் முகாம்கள் துல்லிய தாக்குதல் மூலம் தகர்க்கப்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

இத்தீவிரவாதிகள் பாகிஸ்தானை சேர்ந்தவர்கள் என்பதற்கு ஆதாரம் கோரும் காங்கிரஸ் உறுப்பினரும் முன்னாள் உள்துறை அமைச்சருமான திரு. ப.சிதம்பரத்தின் கோரிக்கையை அமைச்சர் திரு.அமித்ஷா விமர்சித்தார்.

❖❖❖❖❖❖❖❖

## மாநிலங்களவை ஒத்திவைப்பு

**பீஹார் மாநில வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தம்** உள்ளிட்ட பிரச்சனைகளில் இன்றும் அமளி நிலவியதால் மாநிலங்களவை பிற்பகல் 2 மணிவரை இன்று ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையில் இன்று பிற்பகல் ஆபரேஷன் சிந்தூர் துல்லிய தாக்குதல் மீதான விவாதம் எடுத்துக்கொள்ளப்படுகிறது.

முன்னதாக நாடாளுமன்ற இரு அவைகளும் ஃபிடே மகளிர் செஸ் உலக கோப்பை போட்டியில் வெற்றிபெற்ற திவ்யா தேஷ்முக்கிற்கு வாழ்த்து தெரிவித்தது.

மக்களவைத் தலைவர் திரு. ஓம்பிர்லாவும், மாநிலங்களவை துணைத்தலைவர் திரு. ஹரிவன்ஷும் திவ்யா தேஷ்முக்கிற்கு வாழ்த்து தெரிவித்ததோடு, அவரது சாதனையில் தேசம் பெருமை கொள்வதாக பாராட்டு தெரிவித்தனர்.

❖❖❖❖❖❖❖❖

**ஷிவ்ராஜ் சௌஹான்**

**விவசாயிகளின் வருவாயை அதிகரிக்கவும், உணவு** உற்பத்தியை மேம்படுத்தவும் கடந்த 10 ஆண்டுகளாக மத்திய அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக மத்திய வேளாண் அமைச்சர் திரு. ஷிவ்ராஜ் சௌஹான் தெரிவித்துள்ளார்.

மக்களைவையில் இன்று கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், கடந்த 2014-ம் ஆண்டு 246 மில்லியன் டன்னாக இருந்த உணவு தானிய உற்பத்தி தற்போது 353 மில்லியன் டன்னாக அதிகரித்துள்ளது என்றார்.

அதேபோல் ஐக்கிய முற்போக்கு கூட்டணி ஆட்சியில் வேளாண் துறை பட்ஜெட் ஒதுக்கீட்டை காட்டிலும் தற்போதைய ஒதுக்கீடு 5 மடங்கு கூடுதலாகும் என்று குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**தர்மேந்திர பிரதான்**

**வளர்ச்சியடைந்த பாரதத்திற்கான இன்றியமையா பாதையை** தேசிய கல்விக்கொள்கை 2020 கட்டமைப்பதாக மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று நிகழ்சசி ஒன்றில் உரையாற்றிய அவர், நமது கல்வி திட்டத்தை உலக தரத்திற்கு முன்னெடுத்துச் செல்லும் வடிவமைப்பை கொண்டதாக தேசிய கல்விக்கொள்கை திகழ்கிறது என்றார்.

இந்திய கல்வி முறையில் ஒருமறுமலர்ச்சியை ஏற்படுத்தி முழுமையான, உள்ளடக்கிய எதிர்கால தேவைக்கான கல்வி திட்டத்திற்கு வலுவான அடித்தளமாக திகழ்கிறது என்றும் எடுத்துரைத்தார்.

படைப்பாற்றல் திறனை ஊக்குவித்து இளையோருக்கு ஆளுமை வழங்கி 21-வது நூற்றாண்டின் தலைமைத்துவ நாடாக நம்தேசம் உருவாக தேசிய கலவிக்கொள்கை வழிகோலுவதாக திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖❖

**திறன் வளர்ச்சி**

**2025-ம் ஆண்டிற்கான இந்திய திறன் வளர்ச்சி** போட்டிகளுக்கான இணையதள பதிவு இன்று தொடங்கியுள்ளது.

மத்திய திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோர் அமைச்சகத்தின் சார்பிலான இப்போட்டிகள் நம்நாட்டின் இளையோர்கள் சர்வதேச அரங்குகளில் படைப்பாற்றல் திறனை வெளிப்படுத்தும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது.

63 திறன் படைப்பு போட்டிகளில் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களை சேர்ந்த 16 வயது முதல் 25 வயதிற்குட்பட்டோர் இதில் பங்கேற்கலாம்.

சைபர் பாதுகாப்பு, மின்னணு இயந்திரவியல், விமான பராமரிப்பு உள்ளிட்ட சில குறிப்பிட்ட மேம்பட்ட தொழில்நுட்ப திறன்களுக்கான போட்டிகளில் பங்கேற்பவர்கள் 2001-ம் ஆண்டு மற்றும் அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருப்பது அவசியம்.

விண்ணப்பதிவிற்கான காலஅவகாசம் வரும் செப்டம்பர் இறுதிவரை வழங்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

## GSLV F-16

**ஸ்ரீஹரி கோட்டா சதீஷ்தவான் விண்வெளி** மையத்திலிருந்து, புவி கண்காணிப்பிற்கான நிசார் செயற்கைகோள் **GSLV F-16** ராக்கெட் மூலம் நாளைமாலை மணி 5.40க்கு விண்ணில் செலுத்தப்படுவதற்கான 27 அரை மணி நேர கவுண்ட் டவுன் இன்று பிற்பகல் மணி 2.10-க்கு தொடங்குகிறது.

இஸ்ரோவும், நாசாவும் கூட்டாக இணைந்து தயாரித்துள்ள இந்த விண்வெளி திட்டத்தில் முதல்முறையாக **GSLV** ராக்கெட் சூரிய சுற்றுப்பாதையில் நிலைநிறுத்தப்படவுள்ளது.

நிலம் மற்றும் நீர்நிலை மாற்றங்கள் இயற்கை பேரிடர்களை கண்டறிவது, பருவநிலை மாற்ற ஆய்வுகள் போன்றவற்றை இந்த செயற்கைகோள் ஆராயும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

**சர்வதேச புலிகள் தினம்**

**சர்வதேச புலிகள் தினம் இன்று கடைபிடிக்கப் படுகிறது.**

புலிகளின் இயற்கையான வசிப்பிடங்கள் மற்றும் பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஆண்டுதோறும் ஜுலை 29-ம் தேதி புலிகள் தினமாக கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி பிரதமர் திரு.நரேந்திரமோடி விடுத்துள்ள செய்தியில் உலகளாவிய புலிகள் எண்ணிக்கையில் 70 சதவிகிதத்திற்கு மேல் இந்தியாவில் உள்ளதாக பெருமிதம் தெரிவித்தார்.

நம் தேச கலாச்சாரத்தின் ஒரு அங்கமாக புலிகள் திகழ்வதாக கூறியஅவர், புலிகள் பாதுகாப்பு, சமச்சீரான இயற்கையை பிரதிபலிப்பதாக எடுத்துரைத்தார்.

மத்திய சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றத்துறை அமைச்சர் திரு. பூபேந்தர் யாதவ் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், புலிகள் பாதுகாப்பின் முன்னோடி நாடாக இந்தியா உருவெடுத்துள்ளது என்று குறிப்பிட்டார்.

கடந்த 2014-ம் ஆண்டு 47 ஆக இருந்த புலிகள் காப்பகங்களின் எண்ணிக்கை தற்போது 58 ஆக அதிகரித்துள்ளதோடு, புலிகளின் எண்ணிக்கையும் 3 ஆயிரத்து 682 ஆக உயர்ந்துள்ளது என்றார்.

**இந்நாளையொட்டி** மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில புலிகளின் தாயகமாக இந்தியா திகழ்கிறது என்று குறிப்பிட்டுள்ளார்.

**முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின்** விடுத்துள்ள செய்தியில், ஆக்கிரமிப்புகளை அகற்றி, வன ஆரோக்கியத்தை மேம்படுத்தியதால், புலிகள் காப்பாற்றப்பட்டு, காடுகளின் பரப்பு பாதுகாக்கப்படுவதாக தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள புலிகளின் எண்ணிக்கை 306 ஆக உயர்ந்துள்ளதையும் முதலமைச்சர் சுட்டிக்காட்டினார்.

**நீலகிரி மாவட்ட வனப்பகுதிகளில் 200-க்கும்** மேற்பட்ட புலிகள் இருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖❖

எடப்பாடி கே. பழனிச்சாமி

**தேசிய ஜனநாயக கூட்டணியில் பா.ஜ.க. உடன் அஇஅதிமுக** இடம்பெற்றுள்ளதாக அக்கட்சியின் பொதுசெயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியுள்ளார்.

திருச்சி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், கூட்டுறவு வங்கிகளில் கடன்வாங்கும் விவசாயிகளின் சிபில் ஸ்கோர் விவகாரம் குறித்து தாம்

பிரதமரிடம் மனு அளித்ததன் பேரில் தமிழக அரசு அது தொடர்பான சுற்றறிக்கையை திரும்ப பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

ஆட்சியில் இல்லாத போதும் அஇஅதிமுக மக்கள் பிரச்சனைக்கு தொடர்ந்து குரல் கொடுக்கும் என்று அவர் கூறினார்.

தேர்தலுக்கு இன்னும் 8 மாதங்கள் உள்ள நிலையில் ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு நிலைப்பாடு உள்ளதால், அதனடிப்படையில் கூட்டணி ஏற்படும் என்று கேள்வி ஒன்றிற்கு அவர் பதிலளித்தார்.

தேர்தல் தேதி அறிவித்த பின்னர் கூட்டணியில் யார் உள்ளனர் என்பது குறித்து தெளிவாக எடுத்துரைக்கப்படும் என்றும் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ் பொய்யாமொழி**

**திருச்சி துவாக்குடி** நகராட்சிக்கு உட்பட சமுதாய கூடத்தில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் கோரிக்கை மனுக்கள் பதிவேற்றம் செய்வதையும், முகாமின் செயல்பாடுகளையும் மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி இன்று ஆய்வு செய்தார்.

இந்நிகழ்வின் போது பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளையும் அமைச்சர் வழங்கினார்.

❖❖❖❖❖❖❖❖

**மீனவர்கள்**

**எல்லைதாண்டி மீன்பிடித்ததாக கூறி** ராமேஸ்வரம் மற்றும் பாம்பன் பகுதிகளை சேர்ந்த 14 மீனவர்களை இலங்கை கடற்படையினர் பிடித்து சென்றுள்ளனர்.

இவர்களது 2 படகுகளையும் கைப்பற்றியுள்ளனர்

❖❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

**மேட்டூர் அணைக்கு வரும் ஒருலட்சத்து** 10 ஆயிரத்து 500 கனஅடி உபரிநீர் முழுவதும் வெளியேற்றப்படுகிறது

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில்** ஒருலட்சத்து 25 ஆயிரம் கனஅடி தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது.

கரையோர மக்களுக்கு தொடர்ந்து வெள்ள அபாய எச்சரிக்கை நீடிக்கின்றது.

**தேனி மாவட்டம்** சுருளிஅருவியில் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்று அனுமதி வழங்கப்பட்டு உள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖❖

**டென்னிஸ்**

**கஜகஸ்தானில் நடைபெறும் சேலஞ்சர்ஸ்** டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு சசிகுமார் முகுந்தும், கரன்சிங்கும் தகுதிபெற்றுள்ளனர்.

முதல் சுற்றில் சசிகுமார் - ஜார்ஜியாவின் சபாவையும்,

கரண்சிங் - பெலாரசின் இகாரையும் வென்றனர்.

❖❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖❖